வானவில்

VAANAVIL
ISSUE – 3 MARCH 2011

இதழ் - 3 பங்குனி

# வன்னிப் பிரதேசம் துரிதகதியில் அபிவிருத்தி செய்யப்பட வேண்டும்

கிளிநொச்சி, முல்லைத்தீவு, வவுனியா, மன்னார் ஆகிய நான்கு மாவட்டங்களையும் உள்ளடக்கிய வன்னிப் பிரதேசம், இன்று அவசரமான துரித பொருளாதார அபிவிருத்தியை வேண்டி நிற்கிறது. வன்னிப் பிரதேசம் என்பது வட மாகாணத்தின் ஏறத்தாழ 90 வீதமான நிலப்பரப்பையும், நிலவளம், நீர்வளம், காட்டுவளம், கடல்வளம் என ஏராளமான வளங்களையும் கொண்ட ஒரு பிராந்தியமாகும். 50 – 60களில் யாழ்ப்பாணக் குடாநாட்டில் நிலவிய நிலமற்ற அல்லது போதிய நிலமற்ற மக்களின் நிலப் பசியை இந்த மாவட்டங்களே தீர்த்து வைத்தன என்பதும் குறிப்பிடத்தக்கது.



இந்த மாவட்டத்து மக்கள், பிரித்தானிய ஏகாதிபத்தியத்தை தீரமுடன் எதிர்த்துப் போரிட்ட பண்டாரவன்னியன் போன்ற மன்னர்களின் கீழும், அல்லிராணி போன்ற வீராங்கனைகளின் கீழும் வாழ்ந்த மக்கள் என்பதும் நினைவுகூரப்பட வேண்டியவையாகும். அந்த மக்களின் வாழ்வு என்பது இயற்கையோடிணைந்த, விவசாயத்தை அடிப்படையாகக் கொண்ட சுயசார்புப் பொருளாதாரத்தை ஆதாரமாகக் கொண்ட வாழ்க்கையாகவே இருந்து வந்தது.

ஆனால் இவையெல்லாம் கொடிய உள்நாட்டுப் போர் ஆரம்பமாகும் வரைதான். அதிலும் குறிப்பாக 1990 ஒக்ரோபர் 30ம் திகதி யாழ்ப்பாண மாவட்டத்தை விட்டு புலிகளை இராணுவம் வெளியேற்றிய பின்னர், அவர்கள் வன்னிக்கு ஓடிச்சென்று அப்பிரதேசத்தை தமது காப்பிடமாக மாற்றினர் அதன்பின்னர் வன்னியே புலிகளதும், அரச படைகளதும் பலப்பரீட்சைக் களமாக உருமாறியது.

இறுதி யுத்தத்தின் போது அரசபடைகளின் தாக்குதலுக்கு ஈடுகொடுக்க முடியாத புலிகள், சாதாரண அப்பாவிப் பொதுமக்களைத் தமது பாதுகாப்புக் கேடயமாகப் பிடித்து வைத்திருந்ததின் மூலம், ஆயிரக்கணக்கான மக்ககளின் மரணத்துக்கு வழிசமைத்துவிட்டு இறுதியில் தாமும் அழிந்துவிட்டனர். இந்த துன்ப நிகழ்வு இன்று வரலாறாகிவிட்டது. இந்தப் போரில் அதிக இழப்புகளைச் சந்தித்த வன்னி மக்களின் போர் தழும்புகளும் என்றும் அழியாத வடுக்களாகிவிட்டன.

இறுதிக் கட்டப் போரில் இருதரப்பும் இழைத்த (புலிகள் மக்களைப் பணயக் கைதிகளாகப் பிடித்து வைத்திருக்காவிட்டால், இவ்வளவு தூரம் அழிவுகள் ஏற்பட்டிருக்க வாய்ப்பில்லை) மனித உரிமை மீறல்களையும் ஆராய வக்கில்லாத 'சர்வதேச சமூகம்' என்னும் போர்வையிலுள்ள ஏகாதிபத்திய சக்திகள், அழிந்து போன புலிகளை வசதியாகத் தவிர்த்துவிட்டு, மறுதரப்பான அரசாங்கத்தை மட்டும் குற்றம்சாட்டி, தமது அந்தரங்க நிகழ்ச்சி நிரலை மீண்டும் எமது தாயக மண்ணில் அரங்கேற்ற முயல்கின்றன.

தொடர்ச்சி 15ம் பக்கம் பார்க்க...

# பேரினவாதப் போக்கை ஐக்கிய தேசியக்கட்சி கைவிட வேண்டும்

**வானவில்**

ஐக்கிய தேசியக் கட்சி (ஐ.தே.க). சுதந்திர இலங்கையின் முதலாவது ஆளுங்கட்சியாகும். பின்னரும் அக்கட்சி பல தடவைகள் ஆட்சியில் அமர்ந்திருந்த வரலாறுகளும் உண்டு.

ஐ.தே.க தனது வரலாறு முழுவதும் ஏகாதிபத்திய – முதலாளித்துவ சக்திகளின் பிரதிநிதியாகச் செயல்பட்ட அதேநேரத்தில், தமிழ் மக்களுக்கு எதிராகவும் செயல்பட்டு வந்துள்ளது. இருந்தும் தன்னை சிறுபான்மை இனங்களின் நண்பனாகக் காட்டும் வேசத்தையும் போட்டு வந்துள்ளது. அந்த வேசத்தை நன்கு புரிந்திருந்தும், தமிழ் காங்கிரஸ் முதல் புலிகள் வரையிலான தமிழ் தலைமைகள் ஐ.தே.கவை தமிழ் மக்களின் இரட்சகனாகவே காட்டி வந்துள்ளன.

ஆனால் ஐ.தே.கவின் முதலாவது ஆட்சிதான் தான் மலையகத் தமிழர்களின் பிரஜாவுரிமையையும், வாக்குரிமையையும் பறித்து, வடக்கு கிழக்குத் தமிழர்களின் பாரம்பரிய வாழ்விடங்களில் திட்டமிட்ட சிங்களக் குடியேற்றங்களையும் ஆரம்பித்து வைத்தது. இனப்பிரச்சினைக்குத் தீர்வாக 1957ல் உருவான பண்டாரநாயக்க – செல்வநாயகம் உடன்படிக்கையைக் கிழித்தெறிய வைத்தது. அதுமாத்திரமின்றி, தமிழர்களுக்கு எதிராக நடாந்த அத்தனை இன வன்செயல்களையும் முன்னின்று நடாத்தியவர்களும் ஐ.தே.கவினரே. 2000ம் ஆண்டில் சந்திரிகா அரசாங்கம் கொண்டு வந்த தீர்வுத் திட்டத்தை பாராளுமன்றத்தில் கிழித்தெறிந்து தீ வைத்தவர்களும் இதே ஐ.தே.கவினரே.

இவையெல்லாம் பழைய கதைகள் என்று பார்த்தால், ஐ.தே.கவின் இன்றைய நிலையும் அதுவாகத்தான் இருக்கிறது. புலிகளுக்களுக்கெதிரான போர் முடிவடைந்தவுடன் ஐ.தே.கவின் பொதுச் செயலாளர் திஸ்ஸ அத்தநாயக்க, “புலிகள் ஒழிக்கப்பட்டு விட்டதால் இனித் தமிழர்களுக்கு எவ்விதத் தீர்வும் வழங்கத் தேவையில்லை” என வெளிப்படையாகக் கூறினார். தற்பொழுது ஐ.தே.க தலைமைப் பதவியைக் கைப்பற்ற முயன்று வரும் சஜீத் பிரேமதாச, அதிகாரப் பகிர்வை ஓரளவாவது வழங்கி நிற்கும் மாகாணசபைகளை இல்லாதொழிக்க வேண்டும் என்று கூறி வருகின்றார். (தகப்பனாரான ஆர்.பிரேமதாச புலிகளின் உதவியுடன் வடக்கு கிழக்கு மாகாணசபையை கலைத்ததுபோல)

இப்படி ஐ.தே.க நடந்து கொள்வதன் மூலம், அரசாங்கம் தமிழ் மக்களின் பிரச்சினையைத் தீர்க்கவிடாமல், சிங்கள மக்களை இனவாத அடிப்படையில் தூண்டிவிடுவதுதான் அதன் நோக்கமாகும்.

ஐ.தே.கவின் இந்தப் போக்கு தவறானது. கண்டனத்துக்குரியது. அக்கட்சிதான், இனப்பிரச்சினையை யுத்தமாக மாற்றி நாட்டில் இத்தனை பேரழிவுகளும் ஏற்படக் காரணம் என்பதைப் புரிந்துகொண்டு பேரினவாதப் போக்கை அது கைவிட வேண்டும். பொறுப்பான எதிர்க்கட்சியாகச் செயல்பட்டு, அரசாங்கம் இனப் பிரச்சினையைத் தீர்ப்பதற்கு எடுக்கும் முயற்சிகளுக்கு பூரண ஒத்துழைப்பு வழங்க முன்வர வேண்டும்.

---

**தொடர்பு முகவரி:**

**‘வானவில்’ இதழுக்கு கட்டுரைகள், துணுக்குகள், தகவல்கள், விமர்சனங்கள், ஆலோசனைகள் என்பனவற்றை அனுப்ப விரும்புபவர்களும், இதழ்களைப் பெறவிரும்புபவர்களும் மற்றும் அனைத்துத் தொடர்புகளுக்கும் பின்வரும் மின்னஞ்சல் முகவரியுடன் தொடர்பு கொள்ளவும்.**

sunvaanavil@gmail.com

---

முதலாளித்துவத்திலிருந்து பொதுவுடைமைக்கான மாறுதல் என்பது ஒரு வரலாற்றுச் சகாப்தம் முழுவதையும் எடுத்துக்கொள்கிறது. இந்தச் சகாப்தம் முடியும்வரை பழைய நிலையை திரும்பக் கொணரும் நம்பிக்கையைச் சுரண்டுபவர்கள் தவிர்க்க இயலாதபடி பேணி வருவர். இந்த நம்பிக்கை பழைய நிலையை மீட்பதற்கான முயற்சிகளாக மாறுகிறது.

– லெனின்

---

# இந்திய மீனவர்களுக்கு பாதுகாப்பு வழங்கிய புலிகளின் கடற்படை! சீமான் கூறுகிறார்!!

'வானவில்' சென்ற இதழில் ( மாசி – 2011) இந்திய ~ இலங்கை மீனவர் பற்றிய பிரச்சினை பற்றிய கட்டுரை வெளிவந்த போது, வடமராட்சி மற்றும் மாதகல் கடற்பரப்பில் வைத்து இலங்கை மீனவர்களால் இந்திய மீனவர்கள் பிடிக்கப்பட்டு, பொலிசார் மூலமாக நீதிமன்றில் நிறுத்தப்பட்டுத் தடுப்புக்காவலில் வைக்கப்பட்டுப் பின்னர் சட்டமா அதிபர் தலையீட்டினால் விடுவிக்கப்பட்டனர் என்றும் செய்திகள் வெளிவந்திருந்தன.

இந்தச் சம்பவம் விரைவில் நடைபெறவுள்ள தமிழக மாநில சட்டசபைத் தேர்தலையொட்டிய திட்டமிட்ட செயல் என்றும், ஈ.பி.டி.பி கட்சியினரின் உள்ளூராட்சி தேர்தலுக்கான ஒரு நாடகம் என்றும், 'கச்சதீவுக்கு அருகாமையில் இந்திய மீனவர்கள் சென்றாலே விரட்டி விரட்டி சுட்டுத்தள்ளும் இலங்கைக் கடற்படை, பருத்தித்துறைக் கடல் பகுதி வரை அவர்களைச் செல்லவிட்டதா?' என்றும் பல விதங்களிலும் அபிப்பிராயங்களும் வெளிவந்தன.




நான்கு தசாப்தங்களாக இந்தப் பிரச்சினை தொடர்வதும், சுமுகமாக இலங்கையின் வடபகுதியில் தொழில் நடந்த காலங்களில் கூட இலங்கை ~ இந்திய மீனவர்களிடையே சிறு சிறு மோதல் சம்பவங்கள் இடையிடையே ஏற்பட்டதும் உண்மையே.

ஐ.தே.க அரசு – புலிகள் பேச்சுவார்த்தைக் காலத்தில் (2002 – 2003), ஓரளவு சுமுகநிலை தோன்றுவதாகக் காட்டப்பட்ட போது கூட, மன்னார் பகுதியில் இலங்கை ~ இந்திய மீனவர்களிடையே 'மண்டாக்கத்திகள்' கொண்டு மோதும் அளவிற்கு ஒரு சம்பவம் இடம் பெற்றதாக அப்போது செய்திகள் வெளிவந்திருந்தன.

இந்திய மீனவர்கள் பல சந்தர்ப்பங்களில் தாம் இலங்கைக் கடற்பகுதியில்தான் பாடு வைக்க (வலை இறக்க) வேண்டியுள்ளதென்றும், அங்குதான் வளம் உள்ளதெனவும், பல சந்தர்ப்பங்களில் வெளிப்படையாகவே சொல்லியுமிருக்கிறார்கள்.

**சாமி**

"என் தமிழ் மீனவனை அடித்தால், இங்கு இருக்கும் சிங்கள மாணவனை நான் அடிப்பேன்" என்று சொன்னவரே ('செந்தமிழன்' சீமான்) வேறொரு இடத்தில், "ஈழத்துக்குப் போய் தங்கிவிட்டு நம் மண்ணுக்குத் திரும்பவும் புலித் தம்பிகளோடு படகில் புறப்பட்டேன். அப்போது தூரத்தில் நூற்றுக்கும் மேற்பட்ட படகுகள் நின்று கொண்டிருந்தன. 'அங்கே பார்த்தீர்களா அண்ணா, நம் கட்டுப்பாட்டுப் பரப்பில் நம் தமிழகச் சொந்தங்கள் சுதந்திரமாக மீன் பிடிக்கிறார்கள்' எனக் கைகாட்டிச் சொன்னார்கள்.....தமிழக மீனவர்களுக்கு புலிகள் கடற்படை துணை நின்ற தருணங்களை நினைக்கின்ற போதெல்லாம், சிங்களவனின் வெறியாட்டம் ரெட்டிப்பு வேதனையாய் நெஞ்சை அறுக்கிறது" என்று எழுதியிருக்கிறார்.

இதனைப் படிக்கும் போது, 'எமது கடற்பரப்பில் இந்திய மீனவர்கள் மீன்பிடிக்கப் பாதுகாப்பு வழங்கிய புலிகளின் கடற்படை, எமது மீனவர்களை மீன்பிடிக்க விட்டு பாதுகாப்பு வழங்கியிருக்கலாமே?' என்று எண்ணத் தோன்றாதா? இத்தகைய எழுத்துக்களை தமிழ்த் தேசியத்திற்குத் தாங்களே ஏகபோக உரிமையாளர் என்று சொல்லிக் கொள்வோர் மறுபிரசுரம் செய்து வெளியிடுவதுதான் இன்னும் வேடிக்கை.

2007 ஆண்டு தமிழ்நாட்டைச் சேர்ந்த 5 மீனவர்கள் புலிகளால் கொல்லப்பட்டதையும், அதே ஆண்டு ஸ்ரீ கிருஷ்ணா என்ற படகுடன் சேர்த்து தமிழ்நாட்டைச் சேர்ந்த 12 மீனவர்கள் புலிகளால் கடத்தப்பட்டு இரண்டு மாதங்களின் பின்னர் விடுவிக்கப்பட்டதையும் சீமான் போன்ற அரசியல்வாதிகள் தங்கள் அரசியல் இலாபங்களுக்காக மறைத்தாலும், தமிழ்நாட்டு மீனவர்கள் மறக்கமாட்டார்கள்.

உண்மையில் இலங்கைக் கடற்பரப்பில்தான், இந்திய மீனவர்கள் அத்துமீறுகிறார்கள் என்பது தெள்ளத் தெளிவான உண்மை. இதில் இன்னுமொரு விடயமும் நாம் கவனிக்க வேண்டும். இந்திய மீனவர்களில் கடலில் வலை விரித்துக் காத்திருந்து மீண்டும் வலை கிளப்பிச் செல்லும் கட்டுமரத் தொழிலாளர்களோ அல்லது வள்ளத் தொழிலாளர்களோ எல்லை தாண்டி வருவதில்லை.

பாரிய பை போன்ற 'மடிவலை' இழுத்துச் செல்லும் வலுக்கூடிய இயந்திரப்படகான 'றோலர்' எனப்படும் இழுவைப் படகுகளே, இலங்கைக் கடற்பகுதியில் கூட்டம் கூட்டமாக அத்துமீறிப் பிரவேசிக்கின்றன. குறிப்பாக அந்நியச் செலாவணியை ஈட்டித்தரும் இறால் வகைகள் பிடிபடுவதை இலக்கு வைத்தே இவர்கள் இப்பகுதியில் பிரவேசிக்கிறார்கள். இந்தப் பை போன்ற வலையை இழுத்துச் செல்லும் போது வளம் வாரி வழிக்கப்படுகிறது.

எமது மீனவர்கள் கடலில் வலை விரித்துக் காத்திருந்து கிளப்பும் தொழில் முறையையே பெருமளவில் கொண்டிருக்கிறார்கள். இதனால் தமது கடற்பரப்பில் அவர்கள் விரித்திருக்கும் வலைகள் இந்திய இழுவைப் படகுகளில் சிக்கி அறுக்கப்பட்டு சேதமாக்கப்படுகிறது அல்லது காணாமல் போகிறது.

தமிழகத் தென்கரைகளில இழுவைப் படகுத் தொழில் அறிமுகமான எழுபதுகளிலிருந்துதான் இந்தப் பிரச்சினை ஆரம்பமாகிறது. பாரம்பரிய முறைகளில் தொழில் செய்த காலங்களில் காற்றும் கடலும் கரை தெரியாமல் கொண்டு வந்து சேர்த்தாலொழிய, எல்லை தாண்டுமளவிற்கு மீனவர்களிடம் வசதி வாய்ப்பு இருந்ததில்லை. நவீனத்துவம் வளரும் போது, இத்தகைய பிரச்சினைகளும் கூடவே வருவது இயல்பு. இதனால் யதார்த்தத்தைப் புரிந்து கொள்ளாமல் அல்லது புரியாதது போல இருந்து கொண்டு, இருபுறமும் உள்ள மீனவர்களின் அவலத்தைப் பயன்படுத்தி, அன்றாட அரசியல் நடத்துவோரை இனம் கண்டு நிராகரிக்க வேண்டும்.

இருபது முதல் முப்பது கடல் மைல் தூரம் கொண்ட குறுகிய கடல் பகுதியும், மீன்பிடியே வாழ்வாதாரமாகக் கொண்ட கிராமங்கள் கொண்ட நீண்ட கடற்கரையும் இரு நாடுகளுக்கும் உண்டு. எனவே கடல் வளப் பங்கீடு என்பது, இரு நாடுகளும் எதிர்கொள்ளும் சவால்களில் ஒன்று. இதற்கிடையில் சேதுகால்வாய் திட்டம், எண்ணெய் வள ஆய்வு போன்ற இயற்கையைச் சீரழிக்கும் சூழல் மாசுபாட்டுத் திட்டங்களினாலும் மக்களின் எதிர்காலம் அச்சுறுத்தப்படுகிறது.

ஆகவே வளப் பாதுகாப்பு மற்றும் பெருக்கம், மீனவர்களுக்கான கல்வி, மாற்றுத் தொழில் வாயப்புகள் போன்ற நீண்டகாலத் திட்டங்களை முன்னெடுக்க வேண்டுமென இரு நாட்டு அரசுகளையும் வலியுறுத்திப் போராட வேண்டியது இரு நாட்டு மீனவர்கள் முன்னுள்ள அவசியக் கடமையாகும். அதேவேளை நாம் முந்தைய இதழில் குறிப்பிட்டது போல, இருநாட்டு மீனவர்களாலும் எட்டப்பட்ட உடன்பாட்டை உடனடியாக நடைமுறைப்படுத்த வேண்டுமென்றும் வலியுறுத்த வேண்டும்.

போலிச்கூச்சல் போடும் அரசியல்வாதிகளை அம்பலப்படுத்தி, இருநாட்டு மீனவர்களிடையேயும் பரஸ்பர புரிந்துணர்வை ஏற்படுத்தவும், மேம்படுத்தவும் மீனவர் அமைப்புகளுக்கிடையேயான தொடர்பை வலுப்படுத்துவதும் அவசியமாகும்.
*

---

# 'வாழும் மனிதம்'

## முழுநாள் மக்கள் கலாச்சார நிகழ்ச்சி

**இந்நிகழ்வில் -**

- **புத்தகக் கண்காட்சி**
- **கருத்தரங்கு**
- **கலை நிகழ்ச்சிகள்**

**என்பன ஏற்பாடு செய்யப்பட்டுள்ளன.**

**காலம்: ஏப்ரல் 16, 2011 சனிக்கிழமை**

**நேரம்: காலை 9 மணி முதல் மாலை 6 மணி வரை**

**இடம்: ஸ்காபரோ சிவிக் சென்ரர் பிரதான மண்டபம்**

**பிரவேசம் இலவசம் - அனைவரும் வருக.**

**ஏற்பாட்டுக்குழு**

---

# "சிங்களமும் தமிழும் அரச கரும மொழிகளாக்கப்பட வேண்டும்!"

**பாராளுமன்றத்தில் 55 வருடங்களுக்கு முன்பே முழங்கிய பொன்.கந்தையா**

1956ல் பதவிக்கு வந்த எஸ்.டபிள்யூ.ஆர்.டீ.பண்டாரநாயக்கவின் அரசாங்கம், 'சிங்களம் மட்டும்' சட்டத்தை பாராளுமன்றத்தில் கொண்டு வந்தபோது, தமிழர்களின் வரலாற்றில் அவர்களால் தெரிவுசெய்யப்பட்ட ஒரே கம்யூனிஸ்ட் பாராளுமன்ற உறுப்பினரான (1956 ~ பருத்தித்துறை தொகுதி) தோழர் பொன்.கந்தையா, அந்த மசோதா மீது ஆற்றிய உரையின் சில பகுதிகள், அதன் முக்கியத்துவம் கருதி கீழே தரப்படுகின்றது.



பொன் கந்தையா

கௌரவ சபாநாயகர் அவர்களே! இந்த மசோதாவுக்கு எதிராக எனது கருத்துக்களைச் சொல்ல நான் இப்பொழுது எழுகின்றேன்.

இந்த நாட்டின் அரச கரும மொழிகளாக சிங்களமும் தமிழும் ஏற்றுக்கொள்ளப்பட வேண்டும் என்பது தான் எமது கருத்தாகும். ''நிச்சயமாக சிங்கள மொழியைப் பாதுகாக்க வேண்டுமானால் கம்யூனிஸ்ட் கட்சிக்கு வாக்களியுங்கள்'' என்று ஒரு கம்யூனிஸ்ட் கட்சி உறுப்பினர் கூறுவதற்கு உரிமை இருக்கின்றது. அதனாற்தான் ''தமிழ் மொழியைக் காப்பாற்ற வேண்டுமானால் கம்யூனிஸ்ட் கட்சிக்கு வாக்களியுங்கள்'' என்று பருத்தித்துறையில் நானே கூறியுள்ளேன். ஏன்? ஏனென்றால், எமது கம்யூனிஸ்ட் கட்சி தான், இறுதியில் எமது நாட்டின் சுயபாசைகளையும் பண்பாடுகளையும் பாதுகாக்கக் கூடிய பாதுகாவலனாக இருக்கப் போகின்றது என்பது எங்களுக்குத் தெரியும்.

கௌரவ சபாநாயகர் அவர்களே! இந்த மசோதாவுக்கு நான் எதிர்ப்புத் தெரிவிக்கின்றேன். இந்த மசோதாவை எதிர்ப்பதற்கான எனது நோக்கு, நான் ஒரு தமிழனாக இருக்கின்றேன் என்ற உண்மையை மட்டுமே அடிப்படையாகக் கொண்டதல்ல. ஒரு தமிழன் என்ற வகையில், எனக்கு அருமையாக இருக்கின்ற அனைத்தையுமே இந்த மசோதா திருடுகின்றது என்றே நான் நம்புகின்றேன். எனது கடந்த காலத்தையும் நிகழ்காலத்தையும் இது மறுக்கின்றது என்பதோடு, கேடு சூழும் இந்தச் சட்டம், சட்டப் புத்தகத்திலிருந்து நீக்கப்படாதிருப்பின், எமது குழந்தைகளினதும் அவர்தம் தலைமுறைகளினதும் எதிர்காலத்தையும் மறுத்துக் கொண்டிருக்கும். இந்த மசோதாவின் மூலம் அரசாங்கம் இந்த நாட்டில் வாழும் தமிழ் பேசும் மக்கள் சுதந்திரமாகவும், கௌரவமாகவும், நாட்டின் குடிமக்களாகவும் இருந்து கொண்டு வாழும் பயனுள்ள வாழ்க்கையையும், அதற்கான உரிமையையும் மறுக்கின்றது. நாங்கள் கொண்டிருந்த, கொண்டுள்ள, கொண்டிருக்க வேண்டும் என்று அவாவுகின்ற எல்லாவற்றையுமே இது எங்களுக்கு மறுக்கின்றது.

எனது தாய் எனக்கு உணவூட்டியபோது பாடிய அந்த மொழியை, எனது மனைவி எனது குழந்தைக்கு அதனது முதல் மகிழ்ச்சியையும் வருத்தத்தையும் வெளிப்படுத்த பயிற்சியளித்த அந்த மொழியை, எனது தாயோடும் மனைவியோடும் குழந்தைகளோடும் பேசுவதற்கு இந்த அரசோ அல்லது வேறு எந்த அரசுதானுமோ அல்லது உலகின் கொடுங்கோலன் எவனுமோ தடைபோட முடியாது. எனது சொந்த மொழியைப் பேசுவதற்கு எவரும் தடைபோட முடியாது. சட்டங்களும் தடுக்க முடியாது. அந்த உரிமை பிரச்சினையாக இல்லை. பிரச்சினையாக இருப்பதெல்லாம், நான் இந்த நாட்டின் குடிமகனாக இருந்து கொண்டு, நாளாந்த வாழ்விலும் அரசிலும் எனது மொழியை பிரயோகிக்கக் கூடிய உரிமைதான். எனது மொழி உரிமையை நீங்கள் மறுக்கின்ற பொழுது, இந்த நாட்டின் தமிழ் மகனாக நான் கொண்டிருக்கின்ற, கொண்டிருக்கக் கூடிய உரிமைகள் ஒவ்வொன்றையுமே நீங்கள் மறுக்கின்றீர்கள்.

நானும் எனது மக்களும் இல்லாது போய்விட வேண்டும், முடிந்துவிட வேண்டும் என்று உங்கள் போக்கில் நீங்கள் எடுத்த முடிவை எங்களுக்குப் பரிசாக வழங்குகிறீர்கள்.

ஆகவே நீங்கள், உங்களது தர்க்கரீதியல்லாத, நியாயத் தன்மையற்ற ஆனால் அதிகார பலமும் ஆயுத பலமும் கொண்ட மேலாதிக்க பலத்துடன் என்னையும் எனது மக்களையும் இந்த அழகிய நாட்டின் மண்ணிலிருந்து நீக்கும் வரை, என்னை நானே அழித்து விடுவதற்கு மறுத்தால் ஆச்சரியப்பட மாட்டீர்கள். தமது வாழ்க்கையின் அரும் பொருளாக இருக்கின்ற மொழியுரிமையை இழந்து துன்புறுகின்ற அளவுக்கு மக்கள் அடிமைகளாக இல்லை.

நான் ஒரு கம்யூனிஸ்ட். கம்யூனிஸ்ட்டாக இருப்பதில் பெருமையடைபவன். இப்போதைய சமூக பொருளாதார கட்டமைப்பாலும், இதனைப் பாதுகாக்கின்ற அரசியல் நிறுவனங்களாலும் நசிபட்ட, காயப்பட்ட மக்களைக் கொண்ட அமைப்புதான் எமது கட்சி. சுரண்டலிலும் கொடுங்கோன்மையிலும் நிலைகொண்ட அநீதியான சமூகங்கள், அறியாமையிலும், விரக்தியிலும், அவலங்களிலும் வாழ்கின்ற ஆயிரமாயிரம் மக்களைக் குப்பைக் குவியல்களில் வீசியெறிந்து கொண்டிருக்கின்றன. குருட்டாட்ட சக்திகளின் நிரந்தர துன்புறுத்தலுக்கு இலக்காகும் அவர்கள் அவற்றைப் புரிந்து கொண்டு துடைத்தெறிய முடியாதவர்களாக இருக்கின்றார்கள்.

இவ்வாறு உரிமை மறுக்கப்பட்டவர்களின் கட்சிதான் கம்யூனிஸ்ட் கட்சி. அரசியல், பொருளாதார, சமூக ரீதியான எல்லா நடவடிக்கை மட்டங்களிலும் அவர்களது உரிமைக்காக அது போராடுகின்றது. ஒடுக்குமுறை என்ன வடிவத்தில் தோன்றினாலும் அதற்கெதிராக அது போராடுகின்றது. எமது அரசியல் தத்துவத்தின் இந்த அடிப்படை காரணமாகத்தான் கம்யூனிஸ்ட் கட்சியினராகிய நாங்கள் முழுப்பலத்துடன் இந்த மசோதாவை எதிர்க்கின்றோம். இந்த நாட்டில் வாழ்கின்ற எல்லா தேசிய இனத்தவர்களும் தமது மொழியைப் பிரயோகிக்கவும், தங்களைத் தாங்களே தமது மொழியில் ஆளவும், தமது மொழியையும் பண்பாட்டையும் வளர்க்கவும் விருத்தி செய்யவும், இயல்பானதும் தலையிடப்படாததுமான உரிமையைக் கொண்டுள்ளார்கள் என நம்புகிறோம்.

மற்றெந்த மொழிக் குழுக்களையும்விட, எந்தவொரு மொழிக் குழுவும் கூடுதலாகவோ குறைந்ததாகவோ கொண்டிருக்க முடியாத ஒரு உரிமைதான் இது.

குடியுரிமையின் உரிமைகளையும் கட்டுப்பாடுகளையும் பிரயோகிப்பதிலும், அனுமதிப்பதிலும், ஒரு நபரோ அல்லது மொழிக்குழுவோ, அவரது அந்தக் குழுவினது மொழி காரணமாக, அடுத்த நபருக்கோ அல்லது குழுவுக்கோ கூடிய நிலையிலோ குறைந்த நிலையிலோ வைக்கப்பட முடியாது.

இந்த மசோதாவை நாங்கள் நோக்குகையில், இந்த நாட்டில் வாழ்கின்ற அனைத்து தமிழ் பேசும் மக்கட் தொகுதியினதும் உரிமையை இது மறுத்துரைக்கிறது. இந்த உரிமை மறுப்பின் மீது நாங்கள் பாராமுகமாக இருக்க முடியாது என்பதோடு, கம்யூனிஸ்ட் கட்சியினராகிய நாங்கள் இந்த மசோதாவுக்கெதிராக வாக்களிப்போம். இதனது கொள்கைகளுக்கும் செயல்களுக்கும் எதிராக இயங்குவோம்.

இந்தப் பிரச்சினை மீது மற்றும் விடயங்களுக்கிடையே கடந்த ஜூன் மாதத்தில் கம்யூனிஸ்ட் கட்சி தீர்மானம் ஒன்று நிறைவேற்றியது. அந்தத் தீர்மானம் பின்வருமாறு கூறுகிறது:

''சிங்களமும் தமிழும் இலங்கையின் அரச கரும மொழிகளாக இருக்கக்கூடிய வகையில், வெகுவிரைவில் அரசியல் யாப்பு திருத்தப்பட வேண்டும் என பொதுச்சபை கோருகிறது. கல்வித்துறையின் அனைத்து மட்டங்களிலும் போதனா மொழியாக சிங்களமும் தமிழும் உடனடியாகக் கொண்டு வரப்பட வேண்டும் என இது கோருகிறது''.
*

---

## உள்ளூராட்சி சபை தேர்தலில் ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி 205 சபைகளை கைப்பற்றியது

இலங்கையில் 17.03.2011 இல் நடந்த 234 உள்ளூராட்சி சபைகளுக்கான தேர்தலில் 205 உள்ளூராட்சி சபைகளை கைப்பற்றி ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி மாபெரும் வெற்றியீட்டியுள்ளது. இலங்கையின் பிரதான எதிர்க்கட்சியான ஐக்கிய தேசியக்கட்சி 9 சபைகளையும் தமிழரசுக்கட்சி 12 சபைகளையும் முஸ்லீம்காங்கிரஸ் 4 சபைகளையும் கைப்பற்றியுள்ளன. 2006 ஆண்டு நடைபெற்ற உள்ளூராட்சி சபைத்தேர்தலில் ஒரேயொரு உள்ளூராட்சி சபையைக் கைப்பற்றியிருந்த ஜனதா விமுக்தி பெரமுன (ஜே.வி.பி) இத்தேர்தலில் அதனையும் இழந்துள்ளது.

இத்தேர்தலில் ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி 33 இலட்சத்து 84 ஆயிரம் வாக்குகளை (இது தேர்தலில் அளிக்கப்பட்ட வாக்குகளில் 55.65 வீதம்) பெற்றுள்ளது.

---

# ஈழத்துத் தமிழ் இலக்கியம்

**இலங்கைத் தமிழ் இலக்கியத்தின் தோற்றம், வளர்ச்சி என்பன பற்றிக் குறிப்பிடும் போது, இலங்கையில் வெளிவந்த ஆரம்பகால பத்திரிகைகளான 'ஈழகேசரி', 'மறுமலர்ச்சி' இதழ்கள் பற்றிக் குறிப்பிடாமல் யாரும் எழுதுவதோ பேசுவதோ கிடையாது. அந்த இதழ்களில் எழுத ஆரம்பித்தவர்கள் பற்றி குறிப்பிடத் தவறுவதும் இல்லை. அந்தப் பத்திரிகைகள் குறித்தும், அதில் எழுதியவர்கள் குறித்தும், இலங்கைத் தமிழிலக்கியத்தின் செல்நெறியை முற்போக்கு தடத்தில் வழிநடக்க வைத்ததில் பெரும் பங்காற்றிய மறைந்த பேராசிரியர் க.கைலாசபதி அவர்கள், தமது இளமைக் காலத்திலேயே (56 வருடங்களுக்கு முன்பு) மிகத் தெளிவாக ஆய்வு செய்து எழுதிய கட்டுரையை, இன்றைய இலக்கிய ஆர்வலர்கள் தெரிந்து கொள்வதற்காகக் கீழே தருகின்றோம்.**

**இந்தக் கட்டுரை தமிழகத்தின் பிரபல முற்போக்கு எழுத்தாளர் தொ.மு.சி. ரகுநாதன் அவர்களை ஆசிரியராகக் கொண்டு வெளிவந்த, 'சாந்தி' இதழின் முதலாவது ஆண்டு நிறைவையொட்டி 1955ல் வெளியான ஆண்டு மலரில் வெளியானமை குறிப்பிடத்தக்கது.**

**ஆசிரியர் குழு**



**க.கைலாசபதி**

*பாரதியுக இலக்கியம் என்ற பொதுத் தலைப்பின் கீழ் இன்று தமிழ் இலக்கியம் வளர்ந்து வருகிறது. இந்த இலக்கிய வளர்ச்சியில் ஈழநாட்டுத் தமிழ் எழுத்தாளர்கள் எவ்வாறு தங்கள் பங்கைச் செலுத்தியுள்ளார்கள் என்பதைச் சுருக்கமாக ஆராய்வதே எனது நோக்கமாகும்.*

*அங்கொருவர் இங்கொருவராகத் தனிப்பட்ட சில ஆசிரியர்களைத் தவிர, பொதுவாகத் தற்காலத் தமிழிலக்கிய இயக்கங்களும் இலக்கியப் படைப்புகளும் பத்திரிகைகளின் வளர்ச்சியுடன் பிரிக்க முடியாதபடி பிணைந்து கிடக்கின்றன என்பது யாவருமறிந்ததே.*

*1930-ம் வருடத்துக்குப் பின்னர் தமிழ் நாட்டில் காந்தி, சுதந்திரச்சங்கு, மணிக்கொடி முதலிய பத்திரிகைகள் தோன்றியது போல, ஈழத்தில் காந்திய அரசியலினால் கவரப்பட்ட சிலரின் முயற்சியால், அரசியலுடன் இலக்கியத்தையும் சேர்த்து வளர்க்க எண்ணி ஸ்தாபிக்கப்பட்டது 'ஈழகேசரி'. ஈழகேசரியின் ஆரம்ப காலத்தில் பண்டிதர் பரம்பரையிலிருந்தே அதிக ஆதரவு கிடைத்தது. பழைய இலக்கிய இலக்கண விளக்கக் கட்டுரைகள், சமயக் கட்டுரைகள், அரசியற் கட்டுரைகள் - இவைதாம் பெரிதும் வெளிவந்தன. ஈழகேசரியின் இத்தகைய ஆரம்ப வளர்ச்சிக்கும் 'கலைமகள்' சஞ்சிகைக்கும் ஒப்புவமையைக் காணலாம். இதனால்தானோ என்னவோ ஈழகேசரி எழுத்தாளர்கள் சிலர் கலைமகளுக்கும் விடயதானம் செய்ய முடிந்தது.*

*குல-சபாநாதன், சோ.சிவபாதசுந்தரம், சி.வைத்திலிங்கம், இலங்கையர்கோன், சம்பந்தன் ஆகியோர் ஈழகேசரிக் குழுவினர் என்று கூறக்கூடிய வகையில் இலக்கிய முயற்சியில் ஈடுபட்டனர். எனினும் இன்று அக்கால இலக்கிய முயற்சிகளைப் பின்நோக்கிப் பார்க்கும் பொழுது, மேற்கூறிய இலக்கிய கர்த்தாக்கள் மறுமலர்ச்சி இலக்கியத்தையோ, இலக்கியத்தின் உட்பிரிவுகளையோ, புதிய புதிய பரிசீலனைகளையோ அதிகம் வளர்த்தனர் எனக் கூறுவதற்கில்லை. ஆங்கில விமர்சகர்கள் கூறும் 'ரோமான்டிசிசம்' என்னும் கனவுலகக் காட்சிகளில் ஈடுபடச் செய்யும் இலட்சிய பூர்வமான சிந்தனைகளிலும், உணர்ச்சிகளிலும் மயங்கி எழுதினர் என்றுதான் கொள்ளலாம்.*

*எனினும் 1938-ம் வருடமளவில், இளைஞர் சிலரின் ஆர்வத்திற்கும் துடிப்பிற்கும் இப்பத்திரிகை இடம் தரலாயிற்று. மணிக்கொடி, ஊழியன் ஆகிய இரு பத்திரிகைகளும் இவ்விளம் உள்ளங்களுக்குப் பொறாமைப்படத்தக்க முன் மாதிரியாக விளங்கின. இவ்விரு பத்திரிகைகள் வாயிலாக வெளிவந்த இலக்கிய சர்ச்சைகளை இவர்கள் கவனித்தனர். சிறுகதை, (வசன) கவிதை ஆகிய இரு துறைகளுந்தான் முன்னணியில் அடிபட்டன. இவற்றில் ஈடுபட்டவர்களின் பெயர்களும் அடிபடலாயின. தி.ச.வரதராசன், அ.ந.கந்தசாமி, அ.செ.முருகானந்தம், விவியன் நமசிவாயம், ராஜ அரியரத்தினம், நாவற்குழியூர் நடராஜன் ஆகியோர் 'இலக்கிய' உலகில் பிரவேசித்தனர்.*

ஈழகேசரி இவர்களது கன்னிப் படைப்புகளுக்கு இடம் தந்து வந்ததாயினும், வாலிபத் துடிப்பின் அவதியுடனும், இலட்சியக் கனவுகளுடனும் தமிழிலக்கிய உலகையே கலக்கிவிட வேண்டுமென முனைந்து நின்ற இவ்விளைஞர்களுக்கு, தமக்கென ஒரு இலக்கியப் பத்திரிகை அத்தியாவசியம் எனத் தெரிந்தது.

இக்காலத்தில்தான் திருச்சிப் பக்கமிருந்து 'கிராம ஊழியன்' வெளிவரத் தொடங்கியிருந்தது. ஈழத்திலிருந்து இவ்விளைஞரிற் சிலர் அதில் தம் முயற்சிகளை வெளியிட வாய்ப்புக் கிடைத்தது.

1946-ம் வருடம் யாழ்ப்பாணத்திலிருந்து 'மறுமலர்ச்சி' என்ற மாத சஞ்சிகை வெளிவரத் தொடங்கியது. தமது இலக்கிய ஆர்வத்தையே மூலதனமாகக் கொண்டு ஆரம்பித்த மறுமலர்ச்சிக் குழுவினர், முதல் இதழின் 'முகத்துவாரத்தில்' பின்வருமாறு எழுதினர்:

"எழுத்தாளர்களும் ரசிகர்களும் சேர்ந்து ஆரம்பித்த பத்திரிகை இது. இதனுடைய வளர்ச்சி இலக்கியத்தின் வளர்ச்சி....அரசியல் சமூக விடயங்களைக் குத்திக் கிளறுவதற்காகவே ஒரு புதுமையான இலக்கியத்தை 'மறுமலர்ச்சி' சிருஸ்டிக்கப் போவதில்லை..."

ஆரம்பம் எடுப்பாகத்தான் இருக்கிறது. அப்படியிருந்தும் சில காலத்திற்குள் சஞ்சிகை சென்று தேய்ந்திற்று முடிந்தது. ஏன்? சுருங்கச் சொன்னால் 'மறுமலர்ச்சி'க் குழுவினர் இலக்கியத்தின் மேலிருந்த 'ஆர்வ' மிகுதியால் 'கலை கலைக்காகவே' என்ற பழைய கொள்கைக்குள் தம்மையறியாமலே சிக்கிக் கொண்டனர் என்பது என் அபிப்பிராயம். இன்னுஞ் சொல்ல வேண்டுமானால், இவர்கள் தமது சஞ்சிகைக்கு அப்பால் பரந்த மக்கள் கூட்டம் ஒன்று இருக்கிறதென்பதை மறந்துவிட்டார்கள். இதனால்தான், சாதாரண மக்கள் மட்டுமல்ல பல 'இலக்கிய' வாசகர்களே மறுமலர்ச்சியின் ஆதி – அந்தத்தைப் பற்றி அறியாதிருந்தார்கள்: இருக்கிறார்கள். மணிக்கொடி, கிராம ஊழியன், கலாமோஹினி ஆகிய பத்திரிகைகள் வந்த காலத்தில் நிரம்பிய ஆர்வத்துடன் 'மறுமலர்ச்சி' கோஸ்டியினர் இலக்கிய உலகைத் தாமும் ஒருகை பார்க்க நினைத்தனர் என்பதுதான் இன்று பின்னோக்காகப் பார்க்கும் போது நாம் கூறக்கூடியதாகும். "நானும் ஒரு 'மறுமலர்ச்சி' எழுத்தாளனாக்கும்" என்று சிலர் இன்று சொல்லிக்கொண்டு திரியவும் அதனால் ஒரு சந்தர்ப்பமும் கிடைத்தது.

எனினும் தனிப்பட்ட முறையில் முருகானந்தம், "மகாகவி", வரதர், நாவற்குழியூர் நடராஜன் ஆகியோர் சில நல்ல படைப்புகளைத் தந்திருக்கின்றனர் என்பதில் சந்தேகமில்லை.

'மறுமலர்ச்சி' குழுவினரிற் பெரும்பாலோர் உணரவும் செய்யவும் தவறியதை, அவர்க்குப் பின் எழுந்த இலக்கிய கர்த்தாக்களின் படைப்புகள் மூலம் நாம் அறிந்து கொள்ள முடியும். மறுமலர்ச்சிக்குப் பின் வந்தவர்களிடம், தாம் ஒரு இலக்கியக் குழுவினர் என்று சொல்லத்தக்க நெருங்கிய தொடர்பில்லை என்பதைத் தவிர, சிந்தனை வளர்ச்சியில் பல ஒற்றுமைகள் இருக்கின்றன. மேல்நாட்டு இலக்கியங்களில் விருப்பும் பயிற்சியும், தமக்கும் தமது இலக்கியத்திற்கும் அர்த்தம் தரும் முறையில் வெளியேயிருக்கும் மக்கள் சமுதாயத்தைப் பற்றிய உணர்வு, தாம் கையாளும் பாசையில் மிகுந்த சிரத்தை - இத்தகைய பண்புகள் சிலவற்றை இவர்களது இலக்கிய வளர்ச்சியில் நாம் காணலாம்.

இக்குழுவினருள், சில்லையூர் செல்வராசன், முருகையன், சொக்கன், வ.அ.இராசரத்தினம் ஆகியோர் குறிப்பிடத் தக்கவர்கள் என்பது எனது அபிப்பிராயம். ஈழகேசரியில் எழுத ஆரம்பித்த காலத்திலிருந்தே முற்போக்கு எழுத்தாளராக விளங்கி வந்த அ.ந.கந்தசாமியையும் இக்குழுவினருடன் சேர்க்க வேண்டியது அவசியமாகிறது. சமீபத்தில் ஈழத்து இலக்கிய உலகில் திடீர்ப்பிரவேசம் செய்து மின்வெட்டுப்போல, பளிச்பளிச்சென்று நையாண்டிக் கவிதைகள் பல பாடி வரும் 'தான்தோன்றிக் கவிராயர்' இக்குழுவைச் சேர்ந்த இன்னொருவர். இவரின் கவிதைகள் சில வேளூர் கந்தசாமிக் கவிராயர், திருச்சிற்றம்பலக் கவிராயர் முதலியோர் படைப்புகளுடன் வைத்து எண்ணப்பட வேண்டும் என்பது எனது துணிவான முடிவு.

பிரேம்ஜி, எச்.எம்.பி.மொஹிதீன், கே.டானியல், 'புதுமை லோலன்' ஆகியோர் முற்போக்கு எழுத்தாளர் இயக்கத்தின் முன்னணியில் நிற்பவர்களாவர். நமது சமுதாயத்தின் முரண்பாடுகளை உணர்ந்து, பொருளாதார மாற்றத்திற்காக உழைக்கும் அரசியலில் நம்பிக்கை காட்டும் இக்குழுவினர் பல காரணங்களால் போதிய அளவு இலக்கிய சிருஸ்டிகளில் ஈடுபடவில்லை. முற்போக்கு எழுத்தாளர் இயக்கத்தின் மூலம் எதிர்காலத்தில் நல்லதொரு இலக்கிய பரம்பரையை இவர்கள் உண்டுபண்ண முடியும்.

யாழ்ப்பாணம் பண்டிதத் தமிழ் மீதும், சைவத்தின் மீதும் கொண்ட ஈடுபாட்டுக்குப் பேர் போனது. எனினும் மணிக்கொடி காலத்திலிருந்தே யாழ்ப்பாணப் பணடிதர்கள் சிலர் மறுமலர்ச்சி இலக்கியத்தில்

*போதிய அக்கறை காட்டி வந்தார்கள். பொதுவாகப் பண்டிதர்கள் சிறுகதை, (வசன) கவிதை, விமர்சனக் கட்டுரை முதலிய இலக்கியப் பிரிவுகளில் தம் பார்வையைச் செலுத்துவது குறைவு. எனவே இப்பண்டிதர்கள், 'முற்போக்குப் பண்டிதர்கள்' என வைதீகப் பண்டிதர்களால் கருதப்படவும் நேர்ந்ததுண்டு. பஞ்பாட்சர சர்மா, தியாகராஜன், சரவணமுத்து ஆகியோர் மறுமலர்ச்சியில் ஆர்வம் காட்டும் பண்டிதர்களாவர். பண்டித உலகில் இருந்துகொண்டு பழமையையும் புதுமையையும் அறிந்து விளையாடுபவர் பண்டிதமணி சி.கணபதிப்பிள்ளை.*

*கல்விக்கழகங்களின் பிரதிநிதி என்ற முறையில் ஈழத்தமிழின் மறுமலர்ச்சிக்கு அதிகம் உழைத்த ஒரு சிலருள் சிறந்து விளங்குபவர் பேராசிரியர் க.கணபதிப்பிள்ளை. சுமார் பத்து நாடகங்களும், சில நாவல்களும், கவிதைகளும் எழுதியிருக்கும் இவர், ஈழத்தில் நாடக எழுத்தாளரின் ஏகப்பிரதிநிதியாக விளங்குகிறார். விமர்சகர் ஒருவர் கூறுவது போல, "யாழ்ப்பாணப் பேச்சுத் தமிழின் ஜீவனை அறிந்து, பேச்சுத் தமிழின் தாளலயங்களைக் கண்டு, அவற்றை தனது நாடகங்களில் அமைத்த ஒரே ஒரு ஆசிரியர் இவர்தான்."*

*இதுவரை நான் கூறியவற்றிலிருந்து சுமார், இருபது வருடங்களுக்கு முன் ஆரம்பித்த ஈழத்து இலக்கிய மறுமலர்ச்சி கனவுலகுக் காட்சிகளில் லயித்திருந்த எழுத்தாளர்களுடன் ஆரம்பித்து, யதார்த்த இலக்கியம் படைக்கும் - படைக்கக்கூடிய – எழுத்தாளர்களுடன் வளர்ந்து வருகிறது என்பது புலனாகும் என நினைக்கிறேன். "இலக்கியத்தைத் தொழிலாகக் கொண்டு விடாதே. அது உன்னைக் கொன்றுவிடும். அதைப் பொழுதுபோக்காகவே வைத்துக் கொள்" என்று புதுமைப்பித்தன் ஒருமுறை சொன்னதாக அறிகிறோம். இந்த உண்மையை உணர்ந்தோ என்னவோ, ஈழத்தில் தற்சமயம் ஒருவராவது இலக்கியத்தைத் தொழிலாகக் கொண்டிருக்கவில்லை. பத்திரிகாலயங்களில் கடமை பார்ப்பவர்களைத் தவிர, மிகுதிப்பேர் யாவருக்கும் இலக்கிய சிருஸ்டி பொழுதுபோக்கு. தகுந்தபடி பத்திரிகைகள் சன்மானம் தராத நிலைமை, முதலாளித்துவ ஸ்தாபனங்கள் நடத்தும் பெரும்பாலான பத்திரிகைகளில் முற்போக்கு இலக்கிப் படைப்புகள் வெளிவர முடியாத நிலைமை - இவை போன்ற காரணங்களால் இலக்கியமும் இலக்கியகர்த்தாக்களும் திசை தெரியாது மயங்கி நிற்கும் 'சரித்திர கதியில்' இன்றைய மறுமலர்ச்சி இலக்கியம் வந்து நிற்கிறது. இதிலிருந்து விடுபட்டு முன்னேறினால்தான் மறுமலர்ச்சியின் பயனை அடைய முடியும்.*

*

---


# சிங்கள – தமிழ் புத்தாண்டு விழா

**வருடா வருடம் 'கனடிய ஜனநாயக தமிழ் கலாச்சார மன்றத்தினால்' நடாத்தப்பட்டு வரும் சிங்கள – தமிழ் புத்தாண்டு விழா இந்த வருடமும் மிகவும் சிறப்பாக நடைபெறவுள்ளது.**

**இந்த நிகழ்வில் -**

- **பரத நாட்டியம்**
- **கண்டிய நடனம்**
- **சீன சிங்க நடனம்**
- **ஆபிரிக்க மேள வாத்தியம்**
- **சிங்கள – தமிழ் இசை நிகழ்ச்சி**

**என்பன நடைபெறவுள்ளன.**

**காலம்: ஏப்ரல் 23, 2011 சனிக்கிழமை மாலை 5.30 மணி**

**இடம்:** **Agincourt Collegiate Auditorium**
**2621 Midland Avenue (Midland & Sheppard) – Scarborough**

**விபரங்களுக்கும் நுழைவுச்சீட்டு பெறவும் தொ.பே.இலக்கங்கள்:**
416 588 3230 - 416 264 2115 - 416 276 8287

**E-Mail:** cdtamilca@yahoo.ca


---

## ‘கல்தோன்றி மண் தோன்றாக் காலத்துக்கு முன் தோன்றிய மூத்தகுடித் தமிழன்’ தனது சக இனத்தவனிடம் செலுத்திய சாதி ஒடுக்குமுறையின் வடிவங்கள்!

**சாதி அமைப்பு இன்றும் மிக இறுக்கமாக இருக்கும் இலங்கையின் வட பகுதியில் ~ குறிப்பாக யாழ்ப்பாண மாவட்டத்தில், சுமார் அரை நூற்றாண்டுக்கு முன்னர் வரை மிகக் கடுமையான சாதி ஒடுக்குமுறைக் கட்டுப்பாடுகள் தாழ்த்தப்பட்ட மக்கள் மீது பிரயோகிக்கப்பட்டன. இன்றைய தமிழ் இளம் சந்ததியினர் அவற்றை அறிந்து கொள்ளுமுகமாக அவற்றில் முக்கியமான சிலவற்றைத் தருகின்றோம்.**

**தாழ்த்தப்பட்ட மக்கள் செய்வதற்குத் தடை விதிக்கப்பட்ட விடயங்கள்.**

1. மேலங்கி அணியக்கூடாது.
2. கணுக்கால் வரைக்குத் துண்டு (வேட்டி) கட்டக்கூடாது.
3. தோளில் துண்டு (சால்வை) போடக்கூடாது.
4. பெண்கள் மேற்சட்டை மற்றும் தாவணி போடக்கூடாது.
5. வீதிகளிலும் பொது இடங்களிலும் கண்டபடி நடமாடக்கூடாது. சிலவற்றில் ஒருபோதும் நடமாடக்கூடாது. நடமாடக்கூடிய இடங்களில் தமது வருகையை உணர்த்தும் வகையிலும், அவர்களது பாதடிகள் பட்ட இடத்தின் ‘‘துடக்கை’’ அழிக்கும் வகையிலும், பனையின் காவோலையை இழுத்துச் செல்ல வேண்டும். அவர்கள் செல்லும் போது உயர்சமூகத்தவர்கள் யாராவது அவ்வழியால் வந்தால், வீதியோரம் ஒதுங்கி மறுபக்கம் பார்த்துக் கொண்டு நிற்க வேண்டும்.
6. உயர் சமூகத்தினர் அமைப்பது போன்ற மாதிரிகளில் குடிசைகள் அமைக்கக்கூடாது.
7. நகை அணியக்கூடாது.
8. திருமணத்தில் தாலி கட்டக்கூடாது.
9. விசேட சடங்குகளின் போது, பந்தல்களுக்கு வெள்ளை கட்டக்கூடாது.
10. உயர்சாதியினரின் பெயர்களை தமது பிள்ளைகளுக்கு வைக்கக்கூடாது.
11. இறந்தவர்களின் உடல்களை எரிக்காது புதைக்க வேண்டும். உயர்சமூகத்தினரின் மயானங்களுக்குள் பிரவேசிக்கக்கூடாது.
12. நன்மை - தீமைக் காரியங்களின் போது வாத்தியங்கள் எதுவும் பயன்படுத்தக்கூடாது.
13. குடை பிடிக்கக்கூடாது.
14. பாதணிகள் அணியக்கூடாது.
15. கல்வி கற்கக்கூடாது. பின்னைய காலங்களில் பாடசாலைகளில் தாழ்த்தப்பட்ட பிள்ளைகள் அனுமதிக்கப்பட்ட போதும், இருக்கைகளில் உயர் சமூகத்தினரின் பிள்ளைகளுடன் சமமாக அமராது, நிலத்தில் இருந்துதான் படிக்க வேண்டும்.
16. உயர்சாதியினரின் கோவில்களுக்குள் போகவோ, அவர்கள் வணங்கும் தெய்வங்களைத் தமது கோவில்களில் பிரதிஸ்டை செய்யவோ கூடாது.
17. கோவிலில் தேங்காய் அடிக்கக்கூடாது.
18. தேநீர்க்கடைகளுக்குள் போகக்கூடாது.
19. பொதுக்கிணறுகளில் தண்ணீர் அள்ளக்கூடாது.
20. உயர் சமூகத்தினரின் சவர மற்றும் சலவைத் தொழிலாளிகளிடம் சேவை பெறக்கூடாது.
21. சைக்கிள், கார் போன்றவற்றில் பிரயாணம் செய்யவோ அவற்றைச் செலுத்தவோ கூடாது.
22. பஸ் வண்டிகளில் உயர் சமூகத்தினருடன் சமமாக அமராமல் ஒதுக்கமாக நின்று அல்லது கீழே குந்தி இருந்து கொண்டோதான் பயணிக்க வேண்டும்.

**இவை மட்டுமின்றி இன்னும் ஏராளமான கட்டுப்பாடுகள் அவர்கள் மீது விதிக்கப்பட்டிருந்தன. வட பகுதி மக்கள் தொகையில் ஏறத்தாழ மூன்றிலொரு பகுதியினர் ‘பஞ்சமர்’ எனப்படும் தாழ்த்தப்பட்ட மக்கள் என்பது இங்கு குறிப்பிடத்தக்கது.**

✷ சூரிய குடும்பத்தில் 1930 முதல் 2006ஆம் ஆண்டுகள் வரை புளூட்டோ ஒரு கோளாகக் கருதப்பட்டு வந்துள்ளது. ஆனால் அனைத்துலக வானியல் ஒன்றியம் (IAU) 2006ல் ஒரு கோள் என்பது பற்றி ஒரு வரையறையை முறைப்படி அளித்துள்ளது . இதன் அடிப்படையில் சூரியனைச் சுற்றி 8 கோள்கள்தான் உள்ளன என்றும், ஒன்பதாவது கோளாகக் கருதப்பட்ட புளூட்டோவானது ஒரு கோள் அல்லவென்றும் குயிப்பர் பட்டையில் உள்ள ஒரு பெரும் பொருள் என்றும் அறிவித்தது. தற்பொழுது புளூட்டோ ஒரு குறும் கோள் என்று குறிக்கப்பெறுகின்றது. ✷

# மேற்கத்தைய அரசியல் மாதிரிகள் பின்பற்றுவதற்கு ஏற்றவை அல்ல!

## சீனாவின் 'மக்கள் தினசரி' கூறுகிறது!!

கடந்த பல வருடங்களாக அரசியல் சீர்திருத்தங்களுக்கான ஆலோசனை என்ற பெயரில், சில மேற்கத்தைய சக்திகளும், அவர்களது ஆலோசகர்களும் பல கட்சி அமைப்பு முறை, அரசாங்கத்தை மூன்று அதிகார அலகுகளாகப் பிரித்தல் என்பனவற்றை வலியுறுத்தும் "அரசியலமைப்பு சீர்திருத்தங்கள்" எனப்படும் கருத்தை முன்வைத்து வருகின்றனர்.

மேற்கத்தைய ஜனநாயகம், சுதந்திரம், மனித உரிமைகள் என்பவற்றுக்காக வாதாடுபவர்கள் சீனக் கம்யூனிஸ்ட் கட்சித் தலைமையையும், சோசலிச அமைப்பையும் தாக்குவதுடன், பொதுமக்களையும் தவறாக வழிநடாத்த முற்படுகின்றனர்.

சீனா, மேற்கத்தைய அரசியல் முறைமையை அப்படியே பிரதியெடுத்துச் செயல்பட வேண்டும் என வலியுறுத்துகின்றனர். அவர்களுடைய சிந்தனையின் பிரதிபலிப்பையே இந்த விடயங்கள் எடுத்துக்காட்டுகின்றன. மேற்கத்தைய நாடுகளில் நிலவுகின்ற "கட்சி சுழற்சி முறை", "அதிகாரங்களைப் பிரித்தல்", "பாராளுமன்ற ஜனநாயகம்" என்பன எந்தவொரு நாட்டுக்கும் பொருத்தமான சிறப்பான முறைமை என்ற தவறான, கெடுதி விளைவிக்கக்கூடிய கருத்தை இது அடிப்படையாக கொண்டுள்ளது. மேற்கத்தைய அரசியல் மாதிரிகளை உருவாக்குவதற்கான முன்நிபந்தனையானது, சாத்தியமற்றதும் அவமானதுமாகும்.

முதலாவதாக, மேற்கத்தைய நாடுகளின் வளர்ச்சியானது, நீண்டகாலம் மேற்கொண்ட சுரண்டல் மற்றும் பயங்கரமான கொள்ளை என்பவற்றின் அடிப்படையிலானது. மேற்கத்தைய ஆய்வாளர்கள் வழங்கியுள்ள தகவல்களின் அடிப்படையிலேயே, கடந்த 500 வருடங்களில் 30 மில்லியன் (3கோடி) அமெரிக்க பூர்வ குடிகள் இனப்படுகொலைக்கு உள்ளானதுடன், 50 மில்லியன் (5கோடி) கறுப்பு இன அடிமைகள் இலவச தொழிலாளர் சக்தியாக அமெரிக்காவுக்கு விற்கப்பட்டுள்ளனர்.

இரண்டாவதாக, உலகளாவிய உற்பத்தி மற்றும் விநியோகம் என்ற முறைமையின் கீழ், மூன்றாமுலக நாடுகளைச் சுரண்டியதின் மூலமே, மேற்கத்தைய வளர்ச்சியடைந்த நாடுகள் திடீரென மிக அதிக லாபத்தையும், வளர்ச்சியையும் பெற்றுள்ளன. இந்த செல்வமானது இல்லாமல் போகும் போது, இவர்களால் கூறப்படும் தேர்தல் மற்றும் பல கட்சி முறைமைகளைப் பேணுவது கஸ்டமானதாகும்.

மேற்கததைய நாடுகளின் ஜனநாயக முறைமைகளை அப்படியே பின்பற்றிய எல்லா மூன்றாமுலக நாடுகளும் தோல்வியைத் தழுவியுள்ளன. அதற்கான ஒரு பிரதான காரணம், மேற்கத்தைய நாடுகளிடம் இருப்பது போன்ற செல்வம் இந்த நாடுகளிடம் இல்லாமையாகும். ஒரு பன்மைத்துவ சமூகத்தில் நலன்களுக்கிடையில் கடுமையான மோதல்கள் இருக்குமானால், தேர்தல்கள் தடைபட்டு தாக்கம் விளைவிப்பனவாக இருப்பதுடன், சமூக நலன்கள் நிச்சயமாக பலாத்கார வழியினூடாக மறுபங்கீடு செய்யப்படும்.

உள்ளார்ந்த நலன்களுக்கான மோதல்களைக் குறைப்பதற்காக மேற்கு நாடுகள் உயர்ந்த கொடுப்பனவுகள் கொண்ட செலவுமிக்க நலன்புரி முறைமைகளை ஸ்தாபித்து வைத்துள்ளனர். ஆனால் இந்த நலன்புரி நிலைமைகள் உலகின் பல பாகங்களிலிருந்து அவர்கள் கொடூரமாகச் சுரண்டிய வளங்கள் மற்றும் பெரும் செல்வம் என்பனவற்றையே அடிப்படையாகக் கொண்டுள்ளன.

மேற்குலகின் இந்த கூறப்படும் ஜனநாயக அமைப்பு முறையும், சிவில் சமூகத்தின் செயல்பாடும் கொண்ட அடிப்படை இல்லாவிட்டால், அது வேகமாக வீழ்ச்சி கண்டு விடும். உதாரணத்துக்கு, பெரும் எண்ணிக்கையான அரபு குடிவரவாளர்கள் – குறிப்பாக இளைஞர்கள் பிரான்சுக்கு வந்த பின்னர், தொழில் தேடுவதில் இருந்த சிக்கல் நிலையால், சமூகத்தின் மீது படிப்படியாக அவர்களுக்கு ஏற்பட்டு வந்த ஆத்திரம் காரணமாக 2005ல் பாரிசிலும், பிரான்சின் இதர நகரங்களிலும் வெடித்த கலவரங்களைக் கூறலாம். நாம் ஆழமாகச் சென்றோமானால், அடிப்படையான பிரச்சினை என்னவென்பதை அறிந்து கொள்ளலாம். பிரான்சின் நலன்புரி அமைப்பானது, எல்லா குடிவரவாளர்களின் தேவைகளையும் பூர்த்தி செய்ய இயலுமான ஒன்றல்ல.

அமெரிக்காவின் வறுமையான நியூ ஒலியன்ஸ் (New Orleans) நகரில், 2005 ஆகஸ்டில் ஹரிக்கேன் (Hurricane) என்ற சூறாவளி தாக்கிய பின்னர் என்ன நடந்தது என்பதை இன்னொரு உதாரணமாகக் கூறலாம். சூறாவளியால் பாதிக்கப்பட்ட பகுதிகளில் பல பாலியல் வல்லுறவுச் சம்பவங்களும், ஆயுத முனையிலான கொள்ளைகளும் நடைபெற்றன. அதனால் சூறாவளி நிவாரணப் பணிகளில் ஈடுபட்ட இராணுவத்தினர் பூரணமாக ஆயுதம் தரித்து தமது கவச வண்டிகளில் ரோந்து சுற்றவேண்டி வந்தது. இது போன்ற ஒரு நிலை சீனாவில் ஒருபோதும் ஏற்பட்டதில்லை.

18ம் நூற்றாண்டின் பின்னர் மேற்கின் வளர்ச்சியடைந்த நாடுகளின் தொகை 20 ஐ தாண்டவில்லை. இந்த அனைத்து நாடுகளினதும் மொத்த சனத்தொகை 1 பில்லியன் (100 கோடி) அல்லது உலக சனத்தொகையில் ஏழில் ஒரு பங்கு முதல் எட்டில் ஒரு பங்கு ஆகும். இந்த "பணக்கார மனிதர்களின் கிளப்"பின் எல்லை 100 கோடி மட்டுமே. ஏனெனில் அவர்களது கட்டுப்பாடில்லாத வாழ்க்கை முறையை சர்வவியாபகமாக்குவதற்கு வேறு எந்தவொரு வழியும் இல்லை.

மேற்கு நாடுகளின் சில பயனுள்ள நடைமுறைகள் மற்றும் அனுபவங்கள் உட்பட மனித நாகரீகம் ஈட்டியவற்றிலிருந்து குறிப்பிட்டளவு கருத்துகளை பெற்றுக் கொள்வதை நாம் ஏற்றுக் கொள்கின்றோம்.

எப்படியிருந்தபோதிலும், முற்றுமுழுதாக அவற்றைப் பிரதி பண்ணுவதற்கான காரணங்கள் எதுவும் எமக்கு இல்லை. நவ சீனாவின் சிறப்பான நிலைமையானது, நிலையற்ற சர்வதேச நிலைமைகளின் மத்தியிலும், வளர்ந்து செல்லும் பொருளாதார நெருக்கடிகளின் மத்தியிலும், கடுமையாக பிரயத்தனப்பட்டு வென்ற ஒன்றாகும். சோசலிச நாடுகளின் மேன்மையானது, பிரதான பிரச்சினைகளின் மீது ஸ்திரத்தன்மையை நிலைநிறுத்த முடியும் என்ற அதனது வல்லமையைத் தொடர்ந்து பிரதிபலித்து வருகின்றது.

மேற்கத்தைய நாடுகளை நாம் பிரதிபண்ணுவோமாக இருந்தால், பொதுப் போராட்டத்தின் மீதான தத்துவார்த்த அடிப்படையையும், உறுதியான தலைமைத்துவ அடிப்படையையும் நாம் இழந்து விடுவோம். அதன் விளைவாக பின்னர் ஒருபோதும் மீள முடியாதவாறு நாடு குழப்பத்தில் ஆழ்வதுடன், திரும்ப அதிலிருந்து மீள்வதற்கு தேசம் மாபெரும் விலையைக் கொடுக்க வேண்டிய நிலையும் ஏற்படும்.

சீனாவின் பாதையானது பல பத்து இலட்சம் சீன மக்களின் இரத்தத்தாலும், உயிர் அர்ப்பணிப்புகளாலும் உருவாக்கப்பட்ட சுதந்திரம், கடுமையான உழைப்பு, சுய மரியாதை மற்றும் சுய முன்னேற்றம் என்பனவற்றின் மீது முழுநாடும் கட்டமைக்கப்பட்ட புதிய பாதையாகும். தமது சொந்த சுயநலத்தை மறைப்பதற்காக, வெளிநாட்டு சக்திகளைச் சார்ந்து நிற்கும் சிலர், இரவல் நீதிகள் மற்றும் அரசியல் வார்த்தைகள் என்பனவற்றின் மூலம் ஒரு புதிய அரசியல் சக்தியாக வர முயற்சிக்கின்றார்கள். மக்கள் நிச்சயம் அவர்களை நிராகரிப்பார்கள்.

**நன்றி: சீன மக்கள் தினசரி** (People's Daily – China)

*

---

# சாருமதி கவிதைகள்

கிழக்கிலங்கை மண்ணின் முற்போக்குக் கவிஞன் **சாருமதியின்** கவிதைகள், **'அறியப்படாத மூங்கில் சோலை'** என்ற தலைப்பில், அழகிய தடித்த பைண்டிங்கில் 'நந்தலாலா' வெளியீடாக வெளிவந்துள்ளது.

பிரதிகள் பெற பின்வரும் முகவரியுடன் தொடர்பு கொள்ளவும்.


Nanthalala
133- 1/1, Dimbulla Road
Hatton (Sri Lanka)

கனடாவில் பெறுவதற்கு மின்னஞ்சல் முகவரி:

westeastbookslink@yahoo.ca

---

# இலங்கைக்கும் தாமிரபரணி நதிக்குமான வரலாற்றுத் தொடர்பு – ஒரு நோக்கு



**தமிழ்நாடு திருநெல்வேலி மாவட்டம் ஆதிச்சநல்லூரில் புராதன புதைகுழியொன்றில் தமிழ் பிரமி எழுத்துக்களுடன் கூடிய புதைகலமும் மனித எலும்புகளும் சிறிய கலசங்களும் கண்டெடுக்கப்பட்டன.**

**பொ**ங்கி வழிந்து ஒரு காலத்தில் பெருக்கெடுத்து, ஓடிய தாமிரபரணி இன்று ஒரு கால்வாயைப் போல ஓடிக்கொண்டிருக்கிறது. இன்று தாமிரபரணியும், தாமிரபரணி வளர்த்த திருநெல்வேலி நகரமும், பிளாஸ்டிக் குப்பைகளுக்கிடையே தேக்கி வைக்கப்பட்ட சாக்கடை நீரில் மூழ்கிப்போகுமோ என்ற அச்ச உணர்வு நகரத்தைப் பார்க்கும் போதெல்லாம் தோன்றிவிடுகிறது.

தாமிரபரணிக்கும் இலங்கைக்குமான உறவுகள், வரலாற்றின் ஆதிப் பக்கங்களில், இன்றும் உயிர்ப்புடன் இருக்கின்றது. இலங்கை - கிரேக்க, அரேபிய, சீன பயணக் குறிப்புகளில் முக்கியமான இடத்தைப் பெற்றுள்ளது. இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முந்திய ஓவியக் குறியீடுகள், வேறு பல தொன்ம அடையாளங்கள் ஆகியவற்றின் மூலம் இதன் பதிவை மிகவும் தெளிவாக அறிந்து கொள்ளல் இயலும்.

இந்தப் பதிவுகள் அனைத்திலும், இலங்கை என்னும் பெயரைக் காண முடியவில்லை. கிரேக்கத்தைச் சார்ந்த மெகஸ்தனீஸ் கி.மு. இரண்டாம் நூற்றாண்டில் இந்தியாவுக்கு வந்தான். இங்கிருந்து இலங்கைக்குச் சென்ற அவன், இந்தத் தீவை 'தாம்ரபனே' என்று குறிப்பிடுகிறான்.

இலங்கை வரலாற்றக்கு அடிப்படை ஆதாரமாக முன்வைக்கப்படுவது மகாவம்சம். இலங்கை பௌத்த வரலாற்றின் மூலநூலாகிய இதுவும், இலங்கைத் தீவை தாமிரபரணி என்றுதான் அழைக்கிறது. இந்தியப் பேரரசன் அசோகனின் பாறைக் கல்வெட்டுகளிலும் இதற்கான ஆதாரங்கள் இருக்கின்றன. தமிழகத்தின் தாமிரபரணி கரையில் திருநெல்வேலி இருப்பதைப் போல், இலங்கையின் யாழ்ப்பாணத்திலும் ஒரு திருநெல்வேலி அமைந்துள்ளது. இப்பொழுது யாழ்.பல்கலைக்கழகம் இங்குதான் செயல்பட்டுக் கொண்டிருக்கிறது.

ஆழிப்பேரலைகள் விழுங்குவதற்கு முன், தென்பாண்டிக்கும் இலங்கைக்கும் இடையில் நிலத்தொடர்பு இருந்தது என்பது தொல் நம்பிக்கையாகத்தான் இதுநாள் வரை கருதப்பட்டு வந்தது. ஆனால், இன்றைய புவியியல் ஆய்வு வளர்ச்சி, நில இணைப்பு இருந்ததற்கான ஆதாரங்களை கூடுதலாக்கியுள்ளது. கி.மு. 3ம் நூற்றாண்டுக்கு முன்பு வரை இந்த நிலத் தொடர்ச்சி இருந்தது என்பதை இவற்றின் மூலம் உறுதியாக நம்ப முடிகிறது.

இலங்கைக்கும் தமிழகத்துக்கும் இடையில் அமைந்த நிலத் தொடர்ச்சியில் தாமிரபரணி ஏன் ஓடியிருக்கக்கூடாது என்ற கேள்வி இப்பொழுது நியாயமானது தானே? இலங்கை வரலாற்றில் அழிந்து போன தாமிரபரணி, தென்பாண்டிய நாட்டில் வாழ்ந்து இப்பொழுதும் நம்மை பெருவியப்பில் ஆழ்த்துகிறது.

மனிதன் விவசாய வாழ்க்கைக்கு வந்து பத்தாயிரம் ஆண்டுகள் இருக்கும் என்று வரலாற்று ஆய்வாளர்கள் கருதுகிறார்கள். 'இத்தனை ஆண்டுகள் மனிதன் வாழ்ந்த பூமியா திருநெல்வேலி?!' என்று நம்மை வியப்பில் மூழ்கடித்துவிடுகிறது.

**- 'தாமரை' இலக்கிய இதழின் ஆசிரியர் சி.மகேந்திரன் அவர்கள், 'ஜுனியர் விகடனில்' தொடராக எழுதி, பின்னர் விகடன் பிரசுரமாக வந்துள்ள 'ஒரு வண்ணத்துப் பூச்சியின் மரண சாசனம்' என்ற நூலிலிருந்து இந்தப்பகுதி எடுக்கப்பட்டது. அவருக்கும், விகடனுக்கும் எமது நன்றிகள்.**

**- தாமிரபரணி ஆறு நெல்லை மாவட்டம் பாபநாசம் மேற்குத்தொடர்ச்சி மலைப்பகுதியில் தோன்றி தூத்துக்குடி மாவட்டம் புன்னைக்காயல் அருகே கடலில் கலக்கின்றது.**

*

# இனப்பிரச்சினைக்குத் தீர்வுகாணும்படி கோரி ஜனாதிபதிக்கும் தமிழ் கட்சிகளுக்கும் கனடிய தமிழர் ஸ்தாபனங்கள் மகஜர்

இலங்கையின் இனப்பிரச்சினைக்கு குறைந்த பட்சம் 13வது திருத்தச்சட்டத்தின் அடிப்படையிலாவது தீர்வுகாணும்படி வலியுறுத்தி, ஜனாதிபதி மஹிந்த ராஜபக்சவுக்கு கனடாவிலுள்ள 9 தமிழர் ஸ்தாபனங்கள் மகஜர் ஒன்றை அனுப்பி வைத்துள்ளன.

அந்த மகஜரில், போரை முடிவுக்கு கொண்டு வந்ததிற்காக ஜனாதிபதிக்கு தமது நன்றியையும் பாராட்டுதலையும் தெரிவித்துள்ள கனடிய அமைப்புகள், எதிர்காலத்திலும் அவ்வாறான அழிவுகள் ஏற்படாமல் தடுப்பதற்கு, தமிழ் பேசும் மக்களின் நியாயமான பிரச்சினைகளுக்குக் கால தாமதம் இன்றி தீர்வு காணப்பட வேண்டியதின் அவசியத்தை வலியுறுத்தியுள்ளன. இனப்பிரச்சினைத் தீர்வைப் பொறுத்தவரை, இலங்கை போன்ற சிறிய, இனங்கள் கலந்தும் பரந்தும் வாழும் ஒரு நாட்டுக்கு, மாகாணசபை முறைமை ஒரு சிறந்த தீர்வு என்பதையும் அவை சுட்டிக் காட்டியுள்ளன.

அத்துடன், 13வது திருத்தச் சட்டத்தின் அடிப்படையிலான தீர்வை ஒரே குரலில் வலியுறுத்தும்படி, தமிழ் தேசியக் கூட்டமைப்பு, தமிழ் கட்சிகளின் அரங்கம் என்பனவற்றில் அங்கம் வகிக்கும் கட்சிகளுக்கு பிறிதொரு மகஜரை தனித்தனியாக கனடியத் தமிழர் அமைப்புக்கள் அனுப்பி வைத்துள்ளன.

அந்த மகஜரில், நடைமுறைச் சாத்தியமற்ற தனிநாடு, சமஸ்டி போன்ற கோசங்களைக் கைகழுவிவிட்டு, இலங்கைத் தமிழர்களுக்கு பொருத்தமான மாகாணசபை முறைமையை அரசாங்கத்திடம் முழுமையாக அமுல்படுத்தக் கோரும்படி அவை வலியுறுத்திக் கேட்டுள்ளன.

இந்த இரு மகஜர்களினதும் பிரதிகள், இலங்கையின் அனைத்து பிரதான அரசியல் கட்சிகளுக்கும் தனித்தனியாக அனுப்பி வைக்கப்பட்டுள்ளதுடன், அவை இந்தியப் பிரதமர், தமிழ்நாடு முதலமைச்சர், ஐ.நா.செயலாளர் நாயகம் ஆகியோருக்கும் அனுப்பி வைக்கப்பட்டுள்ளன.

இந்த மகஜரில் கனடாவில் செயல்படும், கனடியத் தமிழர் ஜனநாயக விழிப்புணர்வு மன்றம், ஈழமக்கள் ஜனநாயகக் கட்சி, கனடிய ஜனநாயக தமிழ் கலாச்சார மன்றம், 'தாயகம்' இணையப் பத்திரிகை, சமாதானத்துக்கான கனடியத் தமிழர்கள் அமைப்பு, ஆக்கபூர்வ சிந்தனை செயல்பாட்டு தமிழர் மையம், பத்மநாபா ஈழப் புரட்சிகர விடுதலை முன்னணி, தமிழீழ விடுதலை இயக்கம், 'மற்றது' இணைய சஞ்சிகை என்பனவற்றின் சாாபாகப் பிரதிநிதிகள் கையொப்பமிட்டுள்ளனர்.

**குறிப்பு:**
இந்த மகஜர்களின் பிரதிகளை தமிழிலோ ஆங்கிலத்திலோ பெற விரும்புவோர் பின்வரும் மின்னஞ்சல் முகவரியுடன் தொடர்பு கொண்டு பெற்றுக் கொள்ளலாம் என அறிவிக்கப்பட்டுள்ளது.

**E-Mail:** demovizhippu@hotmail.com

---

## அரபுலகச் செய்திகள்

### ○ மேற்குலகம் மீது கடாபி கண்டனம்!

மேற்குலக சக்திகள் தன்னை ஆட்சியிலிருந்து வெளியேறக் கோருவதின் நோக்கம், லிபிய மக்களை அடிமைகளாக்கி, லிபியாவை மீண்டும் தமது காலனியாக்கி, அதன் எண்ணெய் வளங்களைச் சூறையாடுவதற்காகவே என அந்நாட்டின் அதிபர் கேணல் மொஅம்மர் கடாபி பிரெஞ்சு LCI தொலைக்காட்சிக்கு வழங்கிய பேட்டியொன்றில் தெரிவித்துள்ளார்.

மேலும் அவர் கூறுகையில், மேற்கத்தைய சக்திகளில் பிரிட்டனும், பிரான்சுமே லிபியாவுக்கு எதிரான கூடுதலான சதி நடவடிக்கைகளில் ஈடுபட்டுள்ளதாகவும், அவையே லிபியாவுக்கு மேல் விமானங்கள் பறக்கக்கூடாது எனத் தடையைக் கொண்டு வர முயற்சிப்பதாகவும் குற்றம் சாட்டினார். அவர்களது திட்டங்களை லிபிய மக்கள் உறுதியுடன் முறியடிப்பார்கள் எனவும் அவர் சூளுரைத்தார்.

தொடர்ச்சி 15ம் பக்கம் பார்க்க..

முன்பக்கத்தொடர்ச்சி..

ஆனால் வன்னி மக்களின் இன்றைய உடனடித் தேவை ஆறிவரும் புண்ணை அரசியல் நோக்கங்களுக்காக மீண்டும் நோண்டுவதல்ல. அவர்கள் வாழ்வு முன்னைய இயல்பு நிலைக்கு கொண்டுவரப்பட வேண்டும் என்பதே அவர்களது முற்றுமுழுதான இன்றைய எதிர்பார்ப்பாகும். அதற்குத் தேவை அரச ஆதரவுடன் அங்கு மேற்கொள்ளப்பட வேண்டிய துரித பொருளாதார அபிவிருத்தியாகும். ஏனெனில் அரசாங்கத்தின் பங்களிப்பின்றி இந்தப் பாரிய முயற்சியை வெற்றிகரமாக நிறைவேற்ற முடியாது.

அதேநேரத்தில், கடும் உழைப்புக்குப் பேர்போன தமிழ் மக்கள், எல்லாவற்றுக்கும் அரச தயவை நாடி நிற்காமல் தமது சொந்த முயற்சிகளையும் துரிதப்படுத்த வேண்டும். இந்த விடயத்தில் புலம்பெயர் தமிழ் சமூகத்துக்கும் பாரிய பொறுப்புண்டு. புலம்பெயர் தமிழர்கள் விரும்பியோ, பயமுறுத்தலுக்கு அஞ்சியோ கடந்த காலங்களில் வன்னி மக்களின் வாழ்வு போரில் சீரழிவதற்குப் பல்வேறு வகைகளில் பங்களிப்புச் செய்துள்ளனர். அந்தத் தவறைப் பிராயச்சித்தம் செய்வதாயிருந்தால், வன்னிப் பிரதேச மக்களின் வாழ்வை வளப்படுத்த அவர்கள் தம்மாலான பங்களிப்பைச் செய்வது அவசியம்.

வன்னி மக்களின் வாழ்வை வளமாக்குவதில் தமிழ் அரசியல் கட்சிகளுக்கும் பாரிய பொறுப்புண்டு. அரசுடன் இணைந்துள்ள கட்சிகளுக்கு மட்டுமின்றி, எதிர்ப்பு அரசியல் நடாத்தும் கட்சிகளுக்கும் கடமைகள் உண்டு. குறிப்பாக தமிழ் மக்களின் ஏகப்பிரதிநிதி என்று சொல்லிக் கொள்ளும் தமிழ் தேசியக் கூட்டமைப்பு, வழமைபோல 'தமிழ் தேசியம்' என்ற மாயமானைக் காட்டி தமிழ் மக்களை ஏமாற்றுவதை விட்டு, அம்மக்களின் உண்மையான தேவைகளுக்காக உழைக்க முன்வர வேண்டும்.

இதைத்தான் ஏற்கனவே தெரிவுசெய்யப்பட்டுள்ள வன்னி மாவட்டப் பாராளுமன்ற உறுப்பினர்களிடமும், தற்போது தெரிவு செய்யப்படப்பட்டுள்ள, செய்யப்படவிருக்கும் உள்ளூராட்சி சபை உறுப்பினர்களிடமும் வன்னிவாழ் மக்கள் எதிர்பார்த்துக் காத்திருக்கின்றனர்.
*

14ம் பக்கத் தொடர்ச்சி..

## ○ *யெமனில் கிளர்ச்சியாளர்கள் மீது இராணுவம் தாக்குதல்!*

அமெரிக்காவின் நெருங்கிய நண்பராகவிருந்து கடந்த 32 வருடங்களாக சர்வாதிகார ஆட்சி நடாத்திவரும் யெமன் அதிபர் அலி அப்துல்லா சாலியை பதவி விலகக் கோரி, தலைநகர் சானாவில் அமைந்துள்ள பல்கலைக்கழகத்தில் கடந்த பெப்ருவரி நடுப்பகுதியிலிருந்து தங்கியிருந்து கிளர்ச்சியில் ஈடுபட்டு வந்த மாணவர்கள் – பொதுமக்கள் மீது இராணுவம் ரப்பர் குண்டுகளாலும், கண்ணீர் புகையினாலும் தாக்கியதில் 96 பேர் காயமடைந்துள்ளனர்.

முன்னதாக தலைநகரின் மத்திய சிறையில் அடைக்கப்பட்டுள்ள ஆயிரக்கணக்கான சிறைக் கைதிகள், சிறைக்காவலர்கள் சிலரை பணயக் கைதிகளாகப் பிடித்து வைத்திருந்ததைத் தொடர்ந்து, காவலர்களுடன் மோதல் நிகழ்ந்தது. இதில் ஒரு சிறைக்கைதி கொல்லப்பட்டதுடன், 80 பேர் காயமடைந்தனர். அதைத் தொடர்ந்தே பல்கலைக்கழகத்திலிருந்த கிளர்ச்சியாளர்கள் மீது இராணுவம் தாக்குதலில் ஈடுபட்டது. போராட்டங்கள் தீவிரமடைந்த போதும், அமெரிக்க ஆதரவு பெற்ற ஜனாதிபதி அப்துல்லா பதவி விலக மறுத்து வருகிறார்.

## ○ *துனீசியாவில் தற்காலிக அரசு!*

அரபுலகில், துனீசியாவில் முதலாவது கிளர்ச்சியை ஆரம்பித்து, அமெரிக்க சகபாடியான ஜனாதிபதி பென் அலியின் மூன்று தசாப்தகால சர்வாதிகார ஆட்சியை வீழ்த்தி, அவரையும் நாட்டைவிட்டு விரட்டிய பின்னர், இடைக்கால அரசின் பிரதமர் Beijicaid Essebsi தலைமையில் அமைக்கப்பட்ட மந்திரி சபையில் முன்னைய அரசின் உறுப்பினர்கள் சிலர் இடம்பெற்றதை ஆட்சேபித்து கிளர்ச்சியாளர்கள் நடாத்திய எதிர்ப்பால், அவர்கள் வெளியேற்றப்பட்டு புதிய அமைச்சரவை ஏற்படுத்தப்பட்டுள்ளது. இந்த அமைச்சரவை விரைவில் புதிய அரசியலமைப்பை உருவாக்கி நீதியான தேர்தலை நடாத்துவதாக உறுதி அளித்துள்ளது.

# கனடியச் செய்திகள்

## • ஜீ 20 கண்காட்சி

2010ல் கனடாவில் ஜீ 20 நாடுகளின் மாநாடு நடைபெற்றதும், அதற்கெதிராக பல்லாயிரக் கணக்கானோர் பங்குபற்றிய ஆர்ப்பாட்டங்கள் நடைபெற்றதும், அதைக் கலைக்க கனடிய பொலிசார் மூர்க்கத்தனமான தாக்குதல்களை மேற்கொண்டதும், ஆர்ப்பாட்டக்காரர்களில் ஆயிரம் பேர் வரையில் கைதுசெய்யப்பட்டுப் பின்னர் குற்றச்சாட்டுகள் எதுவும் சுமத்தப்படாது அவர்கள் விடுதலை செய்யப்பட்டதும், ஏற்கெனவே அனைத்து ஊடகங்களிலும் வெளிவந்த வந்த செய்திகளாகும்.

இவ்வாறு கைதுசெய்யப்பட்டவர்களில் பத்திரிகைப் படப்பிடிப்பாளர் Brett Gundlock என்பவரும் ஒருவராவார். Queens Park அருகில் ஆர்ப்பாட்டம் செய்தவர்களை நோக்கி பொலிசார் முன்னேறுகையில், அவர் படங்களை எடுத்த போது ஜூன் 26ம் திகதி கைது செய்யப்பட்டு பின்னர் விடுவிக்கப்பட்டார். அவர் இப்பொழுது தான் எடுத்த 20 படங்களை வைத்து, அவை சொல்லும் கதைகளை விளக்கும் முகமாக கண்காட்சி ஒன்றை நடாத்த இருக்கிறார். அந்தக் கண்காட்சிக்கு ‘சிறைக்கைதிகள்’ (Prisoners) எனப் பெயர் சூட்டியுள்ளார். இந்தக் கண்காட்சி மார்ச் 11 மதல் 31 வரை Communication Art Gallery ( Harbord Street) நடைபெறவுள்ளது.

## • கனடாவின் உணவு ஏற்றுமதி வீழ்ச்சி!

உலகளாவிய ரீதியில் உணவு ஏற்றுமதியில் மூன்றாவது இடத்தில் இருந்து வந்த கனடா, தற்பொழுது ஏழாவது இடத்துக்குத் தள்ளப்பட்டுள்ளதாக தகவல் அறிக்கையொன்று தெரிவிக்கின்றது.

அரசாங்கத்தின் தவறான கொள்கைகள், காலாவதியான உற்பத்தி முறைகள், காலநிலை மாற்றம், விவசாயிகளுக்கு போதிய வசதிகள் செய்து கொடுக்கப்படாமை என்பனவே, இந்த வீழ்ச்சிக்குக் காரணம் என அந்த அறிக்கை தெரிவிக்கிறது.

## • ரொறன்ரோ மேயரின் நடவடிக்கைகளுக்கு எதிர்ப்பு!

மூன்று மாதங்களுக்கு முன்னர் நடைபெற்ற ரொறன்ரோ மாநகரசபைத் தேர்தலில் வெற்றியீட்டிய முதல்வர் (Mayor) Rob Ford எடுத்து வரும் நடவடிக்கைகள் சாதாரண ரொறன்ரோ பிரஜைகளையும், மக்கள் நலனில் அக்கறையுள்ளவர்களையும் பெரும் விசனத்தில ஆழ்த்தியுள்ளது. அதற்குக் காரணம் மக்களின் அத்தியாவசிய சேவைகள் பலவற்றை அவர் தனியார் மயப்படுத்தி வருகின்றமைதான்.

சில வாரங்களுக்கு முன்னர், இதுவரை காலமும் மாநகரசபையினால் அகற்றப்பட்டு வந்த குப்பை அகற்றும் பணியில் ஒரு பகுதியை தனியார்துறையிடம் கையளித்தார். தற்பொழுது அரசாங்க வீடமைப்புத் திட்ட அதிகார சபையைக் கலைத்துவிட்டு, அதை தனியார்துறையிடம் கைளிக்க முனைகின்றார். அவரது இந்த முயற்சி இயக்குநர்சபை உறுப்பினர்கள் சிலரின் எதிர்ப்பால் தற்காலிகமாக நிறுத்தி வைக்கப்பட்டுள்ள போதிலும், அதை எப்படியும் நிறைவேற்றியே தீருவதெனக் கங்கணம் கட்டி செயல்படுகின்றார். இதனால் அரசாங்க வீடுகளில் குடியிருக்கும் 1,60,000 குடும்பங்கள் தமது எதிர்காலம் குறித்து கவலையடைந்துள்ளனர்.

ரொறன்ரோ போக்குவரத்து ஆணையத்தில் (Toronto Transit Commission – TTC) முதல்வர் Ford செய்யவுள்ள மாற்றங்களும் பலத்த கண்டனத்துக்குள்ளாகியுள்ளது. போக்குவரத்து ஆணையம் லாபம் தரவில்லையெனக் கூறி 42 பாதைகளில் சேவையை நிறுத்துவதற்குத் தீர்மானித்துள்ளதாகவும் தெரிய வருகிறது.